நிழல்கள்

வேலைக்கு இராத்தூக்கம் விழித்தே ஆகவேண்டும்-ஒரு வாரம் விட்டு ஒரு வாரமாவது. இயற்கைக்கு முரண்பட்ட நிலைதான். கல்லை உருட்டிவிட்டு மலை மேலே ஏறச் சொல்லும் கட்டளை. வேறு வழி ?

எந்த ராஜா பட்டினத்தைப் பிடித்தாலும் இழந்தாலும் இந்த ராஜாவிடம் நெருங்க முடியாது. எந்த ராஜாவைப் பதவியை விட்டு நீக்கினாலும், குடியாட்சி செங்கோல் பிடித்தாலும் இந்த ராஜாவைத் தள்ள முடியாது ; வெல்ல முடியாது. வயிற்று ராஜா !

வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது அத்துவைத நிலை.. தெரிந்தோ தெரியாமலோ மனசு, பேச்சு, செயல் எல்லாம் ஒன்றாகிக் கையில் இருக்கும் காரியத்தில் பரவிக் கரைந்து விடுகிற நிலை. வீட்டுக்கு வந்த பின்தான் தூக்கத்தின் நினைவு.

காலை 5-30 மணிக்கு வந்தவருக்கு அந்தத் தூக்கம் அந்த நினைப்புக்கூட வரவில்லை. அதற்காகப் படுத்துக் கொள்ளாமல் இல்லை.

வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் கிழக்குப் பார்த்த அறை. கதவையும் ஜன்னலையும் மூடிவிட்டு, தலைக்கு உயரமாகச் சுவரில் கையைக் கோத்துத் தலையை வைத்துக் கொண்டு காலை நீட்டி மல்லாக்காகப் படுத்துக்கொண்டிருந்தார். கதவை மூடியதும் சரியாகப் பொருந்தி விட்டது.

ஆனால் அதற்குமேல் சிமிட்டி பலகணி ஒன்று இருந்தது. சந்துகள் வழியே சூரிய வெளிச்சம் அறைக்குள் பாய்ந்து, இருட்டை அரைவாசி தின்றுவிட்டது. அறைக்கு வெளியே தெற்கே வடக்கு ஒற்றைச் சாரித்தெரு.

அவருக்குத் தூக்கம் வரவில்லை. தெரு ஒலிகள் ஒரு காதுக்குள் நுழைந்து மறு காது வழியாகப் போய்விட்டன. சுவரையே பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று சுவரில், சாரி சாரியாக, ஒளி நாடாவைக் கடந்து நிழல்கள் செல்வதும் மறைவதும், மறுபடி புதிய நிழல்கள் வருவதும் போவதுமாக இருந்தன. எல்லாம் நிழல் : ஊரும் நிழல், விரையும் நிழல், போகும் நிழல், வரும் நிழல், மோதிக் கொள்ளும் நிழல்.

நிழல்கள் நகர்வதையே பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்த லயத்தில் இருந்த கண்கள் திடுக்கிட்டுக் கோணத்தை மாற்றின. சுவரில் அவர்கள் பிள்ளையின் புகைப் படம்; மார்போடு புத்தகத்தை வலக்கையால் குறுக்காகப் பிடித்துக்கொண்டிருக்கும் பழம் பசலி மாணவன் படம்.

இத்தனை நாள் இங்கு இருந்ததா? இல்லையே! இப் பொழுது? அவள் கொண்டுவந்து மாட்டியிருப்பாள். இந்தப் படம் எப்பொழுது எடுத்தது? பாவம்! அவள் படும் அவஸ்தை ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆண்டவனா?- சை!...

அவனுக்குக் கைக்கடிகாரம் இல்லை என்று துளைத் தாளே! வாங்கிக் கொடுத்தேனே! ஒரு விநாடியாவது உப யோகித்தானா? ஆச்சரியம்! காலம் நேரம் என்கிற நினைப்பே இல்லாத பிள்ளை. இராத்திரி தூங்கி விழித்துக்கொண்டு கைக் கடிகாரத்தைப் பார்த்து, அழகு பார்த்தோ-மணி பார்த்தோ-தூங்குகிற பிள்ளைகள் இல்லையா? இவன் மாத்திரம் இப்படி-அலாதிப் பிறவி.

நீட்டியிருந்த கால்களை ஆறுதலுக்காக விரித்துக் கொண்டபொழுது, ஒரு புத்தக வரிசை காலில் தட்டுப்

பட்டுச் சரிந்து விழுந்தது முந்திய வருஷத்திய பாட புத்தகங்கள். எத்தனை தரம் சொன்னாலும் எடுத்து வைக்கவில்லை. அலாதிப் பிறவி. புத்தகங்களை உதைக்கக் கூடாது. படிப்பு வரட்டும், வராமல் போகட்டும். படித்த படிப்புக்கு இராத் தூக்கம் விழிப்புக் கிடைத்திருக்கிறதே, அதுவே பெரிய பரிசு. புத்தகம் தாறுமாருகக் கிடந்தால் ரணகளத்தில் கிடக்கும் பிணம் மாதிரி அசிங்கமாக பயங்கரமாக...

ஒழுங்காக அடுக்கி வைப்பதற்காக ஜன்னல் கதவைத் திறந்துகொண்டு புத்தகங்களை எடுத்து அடுக்கினர்.

இரண்டு மணியார்டர் ரசீதுகள் விழுந்தன. ஹாஸ்டல் வார்டனுக்கு அனுப்பிய பணத்துக்கு ரசீதுகள். காலிப் பயல்கள் ! இப்படித்தான் உத்தியோகம் பார்ப்பதா ?

" ரூமில் பையனைப் பார்த்தேன்; காணவில்லை. புதுப் பையன்கள் இருக்கிறார்கள். கேட்டால் தெரியவில்லை. 32-ஆம் நம்பர் ரூம். வேப்பமரத்தடி மூலையில் இருந்தானே, அவன்."

" அங்கில்லையா? நீங்கள் அனுப்பிய ஹாஸ்டல் மணியார்டரில் போன வாரங்கூடக் கையெழுத்துப் போட்டேனே! இங்கேதான் இருப்பான். அறையை மாற்றியிருப்பான். "

" அவனை இப்போதே பார்க்க வேணும்."

" கூட அனுப்ப, குமாஸ்தாகூட இல்லையே. என்ன அவ்வளவு அவசரம்?"

" கோடை லீவுக்கு வீட்டுக்கு வந்துவிட்டுத் திரும்பினவன் ஒரு கடிதாசுகூடப் போடவில்லை. அவன் அதிகமாகக் கடிதாசு எழுதமாட்டான். வந்து சேர்ந்தேன் என்று ஒரு கார்டுகூடப் போடவில்லையே. அவன் தாயாருக்குக் குருட்டுக் குடைச்சல். அரித்துவிட்டாள். வாஸ்தவமாக—"

" அப்பொழுது இருங்கள், பார்க்கிறேன்."

சாவிக் கொத்தை வார்டன் சாவதானமாகத் தேடு கிறார்; காணவில்லை. சட்டைப் பையில் தேடுகிறார்; அங்கும் காணவில்லை. குமாஸ்தாவை வைதுகொண்டே தேடுகிற போது டிரங்குக்கு அடியில் கிடக்கிறது. ''ஆணியில் மாட்டு வதற்குத் துப்பில்லாதவன். முழுச் சோம்பேறி. இவனை எல்லாம் ஒழித்துவிட வேண்டும்.''

பெட்டியைத் திறந்து ஒரு பதிவுப் புத்தகத்தைப் புரட்டுகிறார்.

'' பேர்?''

'' மனவழகன்.''

'' ஆமாம், ஆமாம். ஞாபகம் வந்துவிட்டது. நல்ல பேர் என்று அப்பொழுதே நினைத்துக் கொண்டேன். நல்ல பையன். அவன் உண்டு, அவன் படிப்பு உண்டு. மனவழகன் மனவழகன். ரூம் 32. மனவழகன் அங்கு இருக்க வேண்டுமே.''

'' இல்லையே; இல்லை என்கிறேனே.''

'' அப்பொழுது—ஏ முனுசாமி!''

'' என்னுங்க.''

'' வேப்பமரத்தடி ரூம் 32-இலே இருந்தானே மன வழகன்?''

'' ஆமாங்க.''

'' அங்கே இல்லையா?''

'' இல்லிங்களே.''

'' பின்னே எந்த ரூம்?''

'' அந்தப் புள்ளே இங்கேயே இல்லீங்க.''

'' என்னடா இல்லே?''

'' லீவுக்கப்பறம் ஹாஸ்டலுக்கே வரலீங்க.''

" போடா மண்ணாங்கட்டி."

" நான் தினம் தவறாமெ சுத்திப் பாக்கறேனே. எந்த ரூமிலே யார் இருக்கான்னு கேளுங்க; சொல்றேனா இல்லையா பாருங்க."

" உனக்கு ஒன்றும் தெரியாது. அந்தக் குமாஸ்தாவை அழைத்தால்—"

" என்ன சோமு! 32-ஆம் நம்பர் ரூமிலே மனவழகன் இருந்தானே; இப்பொழுது எங்கே இருக்கிறான்!"

" அவன் எங்கேயும் இல்லை."

" பின்னே ?"

" 32-ஆம் நம்பர் ரூமிலே தஞ்சாவூர்ப் பையன்கள் இருக்கிறார்கள். கோடை லீவுக்குப் போனவன் திரும்பி வரவே இல்லை."

" வரவே இல்லையா ? நிச்சயமாக ?"

" வரவே இல்லை."

" இந்தப் பதிவுப் புத்தகத்தைப் பாரு."

" கணக்கப்பிள்ளை எழுத்து."

" அதைக் கேட்கவில்லை. 32-ஆம் நம்பர் ரூமைப் பார்."

" கணக்கப்பிள்ளைதான் இதை எழுதினார். போன (கால்) புத்தகத்தைப் பார்த்து அப்படியே எழுதியிருக்கிறார். திருத்தல் போடவில்லை."

" பையன் இங்கே சாப்பிடவில்லை. நீங்கள் பணத்தை மாத்திரம் வசூல் செய்துகொண்டு விட்டீர்கள்!"

எங்களுக்கு எப்படித் தெரியும் ஐயா ? முழங்கால் வலித்தால்தானே முழங்கால் இருக்கிறதே ஞாபகத்துக்கு வருகிறது? அந்த மாதிரி சிக்கல் வந்தால்தான். இல்லா

விட்டால் யந்திரம் மாதிரி போய்க்கொண்டே இருப்போம். வேணுமானல் பணத்தைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.''

''பணம் கிடக்கட்டும் குப்பை! அவன் ?''

'' காலேஜுக்குப் போகிறேன் என்று எங்கேனும் போயிருந்தால்? குடும்பத்தில எவ்வளவோ இருக்குமே!''

'' எங்களுக்கு ஒரே பெண்; ஒரே பிள்ளை.''

'' கோபித்துக் கொள்ளவில்லையா ?''

'' அதெல்லாம் மூச்சு விடப்படாது. வழக்கம் போல லீவு முடிகிற சமயம் பெட்டி படுக்கை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் நான்தானே ரெயிலேற்றினேன்? புதுத் துணிமணி ஐம்பது ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்திருந்தேன். ரெயில் வந்ததும் நானே ஏற்றிவிட்டேன். ஒரே கூட்டம். நெரிசலில் மெதுவாக ஏற்றிவிட்டேன். ரெயில் பிளாட்பாரம் கோடியைத் தாண்டுகிற வரையில் நின்றுகொண்டிருந்தேன். புதுக் கைக் குட்டையை ஆட்டி ஆட்டிக் காட்டிக்கொண்டே இருந்தான். வரவில்லை என்ருல்—?''

'' பதில் சொல்லத் தெரியவில்லையே! நீங்கள் விசாரியுங்கள். நானும் விசாரிக்கிறேன்.''

மணியார்டர் ரசீதுகளைத் தனியாக எடுத்து வைத்தார். புத்தகங்களை அடுக்கி வைத்துவிட்டுத் திரும்ப ஜன்னலை மூடிக்கொண்டு பழையபடி நீட்டிக் கொண்டார்.

ரெயில் போகும் வேகத்தில் கர்டர் பாலத்துப் பக்கத் தகடுகள் தோன்றி எழுந்து சாய்ந்து படுத்து மறையுமே, அது மாதிரி நிழல்கள் விரைந்துகொண்டிருந்தன. ஒரு நிமிஷம் நிழலையே காணவில்லை. கஞ்சிபோட்ட காடாத் துணிபோலச் சுவர் வெறிச்சென்று இருந்தது. பட்டாக் கத்திபோல ஒளி குத்திட்டு நின்றது. திரும்பவும் இரு

புறத்திலிருந்து இரு நிழல்கள் எதிரும் புதிருமாக விரைந்து வந்து மோதிக் கலந்து அடுத்த நிழலுக்கு உணவாகி விட்டன. தொடர்ந்து நிழல் வரிசை.

"என்ன வேணும் ?"

"இந்தச் சிவப்புக் கோடிட்ட பத்திரிகைச் செய்தியை—"

"ஆமாம்."

"ஏதேனும் போட்டோ இருக்குமா ?"

"நீங்கள் யார் ?"

"நான் ஹாஸ்டல் வார்டன்."

"343 ! நாலாவது பெட்டி போட்டோவை எடுத்தா."

"இதோ—"

"ஆமாம். அவனேதான் ; எங்க ஹாஸ்டல் பையன்."

"ராத்திரி எக்ஸ்பிரசில் விபத்து. எப்படியோ வண்டியி லிருந்து விழுந்திருக்கிறன். ரெயிலில் கூட்ட நெரிசல். ஒருவருக்கும் ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. கூட்டத்தைச் சமாளிப்பதற்கே அவர் அவர்களுக்கு விழி பிதுங்கிக் கொண்டிருந்தது. யார் என்னவென்று சோதித்தோம்–சட்டை பெட்டி படுக்கை எல்லாவற்றையும். 25 ரூபாய்ப் பணமும் சென்னைக்கு ஒரு டிக்கெட்டும் இருந்தன. பெயரே தெரியவில்லை. யாரோ பள்ளிக்கூடத்துப் பிள்ளை என்று தோன்றிற்று. அவ்வளவுதான். ஒரு போட்டோவை எடுத்து வைத்தோம். அவர் யார் ?"

"தகப்பனர்."

"பாவம் ! பிடி. ஐயா சாய்கிறர். பெற்றவராச்சே."

நிழல்கள் ஓய்ந்துவிட்டன. ஒரு நிமிஷம், நாலு ஐந்து நிமிஷம்...தெருவிலே ஜனநடமாட்டம் இல்லையா ? ஓ !

சூரியன் மேலே ஏறிவிட்டானு ? அதுதான் வெளிச்சத்தை உள்ளிருட்டுத் தின்றுவிட்டது. தூக்கந்தான் வரும் தூக்கம்...

ஜன்னலைத் திறந்தார். ஜனங்கள் விரைந்து எங்கோ சென்றுகொண்டிருந்தனர். லேசான காற்றில் மரக்கிளைகள் இல்லை என்பதுபோல் தலையாட்டிக் கொண்டிருந்தன.

மணியார்டர் ரசீதுகளைச் சுக்கு நூருக்கி வெளியே எறிந்தார். வெள்ளை வண்ணுத்திப் பூச்சிகள்போல் அவை பறந்து சென்றன. புகைப்படம் பறக்கவில்லை.

'பாவம் ! அவள் படும் அவஸ்தையை யாரால் படமுடியும் ? இருந்தாலும் வயிற்று ராஜா விடுகிருனு ! என்ன பண்ணிக்கொண்டிருக்கிருளோ ?'

"என்ன ? பாலைத் தீய்க்க வச்சூட்டு அடுப்பு நெருப்பையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருயே !"

"ஹா !"

"நான்தான் ; பயப்படாதே."

"தூங்கல்லிங்களா ?"

"தூக்கம் வரவில்லை."

"அந்தப் போட்டோவை நீயா கொண்டுவந்து மாட்டினுய் ?"

"ஆமா."

"முதலில் அந்த இடத்தைவிட்டு எடுத்துவிட்டு மறு காரியம் பார்."

"எனக்கு வேறே என்ன இருக்கு ?" முக்கல், முனகல், அழுகை, கண்ணீர்.

"மக்குப் பிணம் ! நான்தான் இத்தனை நாழிகை நிழலைக் கட்டிக்கொண்டு அழுதேனென்ருல்...நீயும் நிழலைக் கட்டிக்கொண்டு அழுது தொலை!"